**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 - 2020**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947- எஸ்ஆர்ஜ மற்றும் 2948 - எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டமானது (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை புனரமைத்து விரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற தண்ணீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாகத்தில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்கள் மற்றும் முகாமையின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல், (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை அமுலாக்கல் என்பவற்றினை எதிர்பார்க்கப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியன் அல்லது 75 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியன் அல்லது 25 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் நிகழ்ச்சித்திட்டத்தின் காலப்பகுதி 2022 ஒக்தோம்பர் 24 ஆம் திகதி வரை நான்கு தடவை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடனளிக்கும் முகவரால் 2013 -2020 ஆம் வரையில் அறவிடப்பட்டிருந்த ரூபா 795 மில்லியன் கடப்பாட்டு கட்டணங்கள் மற்றும் வட்டிகள் நிதிக்கூற்றில் திறைச்சேரி அளிப்பின் கீழ் பிழையாக காண்பிக்கப்பட்டிருந்தது, அதில் 2019 திசெம்பர் 31 வரை வசூலிக்கப்பட்டிருந்த ரூபா 616 மில்லியன் தொகை நிதிக் கூற்றில் கடந்த ஆண்டிற்கான சீராக்கல்களுக்கு பதிலாக நடப்பு ஆண்டின் பரிவர்த்தனையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 795.44 | எதிர்கால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரையை பின்பற்றுவோம். | ADB கடனின் ஊடாக பெறப்பட்ட வருமானத்தின் கீழ் அறிக்கையிடப்படவும், நிதி நிலைமைக் கூற்றில் திறைச்சேரி அளிப்புக்களை சீராக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 226.99 மில்லியன் பெறுமதியான பரிவர்த்தனை வருமானம் நிதி நிலைமை கூற்றில் நிதி மூலத்தின் கீழ் வேறுபடுத்திக் காட்டப்படுவதற்கு பதிலாக செய்யப்பட்டு வருகின்ற வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 226.99 | எதிர்கால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரையை பின்பற்றுவோம். | நிதி நிலைமைக் கூற்றில் பரிவர்த்தனை வருமானமானது நிதி மூலத்தின் கீழ் வேறாக காண்பிக்கப்படல் வேண்டும. |
| (இ) | செயற்திட்டத்தின் சார்பில் நீர் வழங்கல் மற்றும் வடிகலமைப்பு சபையினால் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட்ட ரூபா 182.55 மில்லியனான கடன் வட்டி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 182.55 | செயற்திட்ட கணக்கு நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் இப் பதிவு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் லெஜரில் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. பதிவானது பின்னர் செயற்திட்ட புத்தகங்களிலும் கணக்கிடப்பட்டுள்ளது. | செயற்திட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதன் முன்னர் தொடர்புடைய செலவினங்கள் கருத்திற் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2017 ஆம் ஆண்டில் அரச பங்களிப்பினால் பெறப்பட்ட வருமானத்திற்கு எதிராக ரூபா 15.79 மில்லியன் வற் வரி விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அது அரச பங்களிப்பிற்கு கொண்டு வரப்பட்டிராததுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் 2021 பெப்ரவரி 12 திகதிய 01-2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றக்களில் வற் வரியாக வேறுப்படுத்தி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 15.79 | 2017 ஆம் ஆண்டில் இலங்கை அரசினால் ஈட்டப்பட்ட வருமாத்திலிருந்து வேறுப்படுத்தப்பட்ட தொகையான ரூபா 16,343,433.56 ஆக காணப்பட்டதுடன் அது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் கோரப்பட்ட தொகையாகும். குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கை வோட் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வற் வரிக்கு தொடர்பானதாகும். | அரச பங்களிப்பின் கீழ் கருதப்படுவதற்கு மற்றும் நிதிக் கூற்றுக்களில் வற் வரி கணக்காக வேறுப்படுத்தி காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவு | வினைத்திறனான செயற்திட்ட முகமைத்துவத்தினை உறுதி செய்வதற்காக செயற்திட்ட பணிப்பாளர் எப்போதும் முழு நேர அடிப்படையில் இணைக்கப்படல் வேண்டும், எனினும் அவர் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் மேலதிக பொது மேலாளராக பதவி உயர்த்தப்பட்டிந்தமையினால் செயற்திட்டத்திற்கு அவரின் சேவை முழு நேரமாக பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | புதிய பதவி இன்னுமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உறுதி செய்யப்பட்டிராததுடன் அது பதிற் கடமை பதவியொன்றாக மட்டும் ஆவதுடன் செயற்திட்டம் 01 இறுதி கட்டத்தில் காணப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உறுதிப்படுத்தல் அடிப்படையில் செயற்திட்ட பணிப்பாளர் பதவி மாற்றப்படுவதற்கு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தீர்மானிக்கும். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் விரைவுப்படுத்தப்படுவதற்காக செயற்திட்ட பணிப்பாளரின் முழு நேர சேவை பெற்றுக் கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்
### 3.1 பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டத்தின் பௌதீக செயன் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இற்கு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 83.44 சதவீதமாக காணப்பட்டது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டினுள் செயற்திட்டம் 8.22 சதவீதத்தினை மட்டும் அடைந்திருந்தது. செயற்திட்டத்தின் ஒவ்வொரு கூறுகளினதும் ஒட்டுமொத்த செயல்திறன் பின்வருமாறு.

| இல | நடவடிக்கைகள் | அலகுகள் | எதிர்பாரக்கப் பட்ட இலக்கு | 2020 திசெம்பர் 31 இல் அடையப்பட்ட இலக்கு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரத்தின் வடக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பு (ஐசீபீ -1) | | | | கொழும்பு நகரத்தில் வருமானமில்லாத நீரினை குறைக்கும் பதினெட்டு சதவீதமான எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடையப்படுவதில் தோல்வி கண்டிருந்தது. | பின்வரும் காரணங்களினால் முன்னேற்றத்தின் விகிதம் பாதிக்கப்பட்டிருந்தது.<br>▪ ஆரம்ப செயற்பரப்பின் குழாய் வைத்தல் நீளத்தினை அதிகரித்தமை<br>▪ ஏனைய அதிகாரிகளினால் செய்யப்பட்ட வேலைகளுடனான சிரமங்கள்<br>▪ பாதகமான காலநிலை<br>▪ தீவிரவாத தாக்குதல்<br>▪ கொவிட் 19 தொற்று<br>▪ பூர்த்தி செய்யப்பட்டது | திருத்தப்பட்ட கால வரையறையினுள் வேலை நிறைவேற்றப்படுவதற்கு தொடர்ச்சியாக உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் அவசியமாகும். |
| | - குழாய்கள் பொருத்துதல் | மீற்றர் | 206,229 | 205,448 | | | |
| | -இணைப்புகள் மாற்றல் (முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட) | வீடுகள் | 34,212 | 26,918 | | | |
| | - தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்ட முழுமையாக பூர்த்திக்கப்பட்ட DMAS | எண்ணிக்கை | 16 | 06 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | -ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம். | சதவீதம் | 99.54 | 97.16 | | (6எண்ணிக்கை) டிஎம்ஏஸ் <18% | |
| (ஆ) | கொழும்பு நகரத்தின் கிழக்குப் பகுதியில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக முறைமை புனரமைப்பு – (ஐசீபீ-2) | | | | | பின்வரும் காரணங்களினால் முன்னேற்றத்தின் விகிதம் பாதிக்கப்பட்டிருந்தது.<br>▪ ஆரம்ப செயற்பரப்பின் குழாய் வைத்தல் நீளத்தினை அதிகரித்தமை<br>▪ ஏனைய அதிகாரிகளினால் செய்யப்பட்ட வேலைகளுடனான சிரமங்கள்<br>▪ பாதகமான காலநிலை<br>▪ தீவிரவாத தாக்குதல்<br>▪ கொவிட் 19 தொற்று<br>பூர்த்தி செய்யப்பட்டது (4 எண்ணிக்கை) டிஎம்ஏஸ் <18% | திருத்தப்பட்ட கால வரையறையினுள் வேலை நிறைவேற்றப்படுவதற்கு தொடர்ச்சியாக உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் அவசியமாகும். |
| | -குழாய்கள் பொருத்துதல (முதன்மை ஊட்டி உள்ளடங்கலாக) | மீற்றர் | 244,279 | 221,034 | கொழும்பு நகரத்தில் வருமானமில்லாத நீரினை குறைக்கும் பதினெட்டு சதவீதமான எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் அடையப்படுவதில் தோல்வி கண்டிருந்தது. | | |
| | -இணைப்புகள் மாற்றல் (முழுமையாக பூர்த்திக்கப்பட்ட) | வீடுகள் | 26,251 | 10,868 | | | |
| | -தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்ட முழுமையாக பூர்த்திக்கப்பட்ட DMAS | எண்ணிக்கை | 20 | 04 | | | |
| | -ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம். | சதவீதம | 74.52 | 71.09 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (இ) | மாலிகாகந்த வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக கட்டிட நிர்மாணம் | சதவீதம் | 100 | 73.54 | வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்காக கட்டிட நிர்மாண பூர்த்தியாக்கலில் தாமதம். | விசேட வீட்டு தளபாடங்களுடன் ஆறாம் மாடியில் தொலைப்பேசி மத்திய நிலையம் ஸ்தாபித்ததன் காரணத்தினால் செயற்திட்டம் நிறைவு செய்யப்படுவதற்கு தாமதமாகியது. | திருத்தப்பட்ட கால வரையறையினுள் வேலை நிறைவேற்றப்படு வதற்கு தொடர்ச்சியாக உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் அவசியமாகும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| ---- | --------------- | ----------------- | ---------------------- |
| (அ) | 16 மாவட்ட அளவீட்டு பிரதேசங்களில் 06, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 உள்ளவாறு 206,229 மீட்டர்களில் 205,448 மீட்டர்களின் சீரமைப்பு பணிகள் முடிவடைந்திருந்த போதிலும், ஒட்டுமொத்த வருமானமில்லாத நீரின் கணிசமான அளவினை குறைக்க முடியாதிருந்தது, ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 72 மாதங்களுக்கு பின்னர் ஆரம்ப கட்டத்தில் அதிக வருமானமற்ற மாவட்ட அளவீட்டுப் பகுதிளை அடையாளம் காணப்படாதமை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டமையினால் ஆகும். | டீஎம்ஏ எல்லைகள் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டிருப்பினும், முழு கொழும்பு நகர குழாய் அமைப்பும் ஒரே அமைப்பாகவே செயல்பட்டது. எனவே, வருமானமற்ற தண்ணீர் டீஎம்ஏ களின் உச்ச சதவீதத்தினை அது கண்டுபிக்க முடியவில்லை. | திருத்தப்பட்ட ஒப்பநதக் கால வரையறைக்குள் நிறைவு செய்வதற்கு பணிகளை தொடர்ந்து உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | 20 மாவட்ட அளவீட்டு பிரதேசங்களில் 04 தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 உள்ளவாராறு 244,279 மீட்டர்களில் 221,034 மீட்டர்களின் சீரமைப்பு பணிகள் முடிவடைந்திருந்த போதிலும், ஒட்டுமொத்த வருமானமில்லாத நீரின் கணிசமான அளவினை குறைக்க முடியாதிருந்தது, ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து 65 மாதங்களுக்கு பின்னர் ஆரம்ப கட்டத்தில் அதிக வருவாய் அல்லாத மாவட்ட அளவீட்டுப் பகுதிளை அடையாளம் காணப்படாதமை மற்றும் முன்னுரிமை | டீஎம்ஏ எல்லைகள் ஆரம்பத்தில் குறிக்கப்பட்டிருப்பினும், முழு கொழும்பு நகர குழாய் அமைப்பும் ஒரே அமைப்பாகவே செயல்பட்டது. எனவே, வருமானமற்ற தண்ணீர் டீஎம்ஏ களின் உச்ச % அது கண்டுபிக்க முடியவில்லை.. | திருத்தப்பட்ட ஒப்பநதக் கால வரையறைக்குள் நிறைவு செய்வதற்கு பணிகளை தொடர்ந்து உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். |

அடிப்படையில் நிறைவு செய்யப்பட்டமையினால் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 யூலை 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம், மாலிகாஹறந்த வருமானமற்ற தண்ணீர் 06 மாடிக் கட்டிடம் நிர்மாணிப்பு பணிகள் 2018 ஒக்தோபர் 23 வரை 18 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருப்பினும் ஒப்பந்தம் நிறைவடையுமென பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 28 மாத கால தாமதத்தின் பின்னர் 2021 யூலை 07 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு மாடியும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | தற்போது நிலவி வரும் தொற்று நிலை (கடந்த ஒன்றறை ஆண்டு) மற்றும் வெளிநாட்டு பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் தாமதத்தின் காரணத்தினால் ஊழியர்கள் அந் நிலையங்களுக்கு வருதலில் குறைப்பாடு காணப்பட்டமை போன்ற பல்வேற காரணங்களினால் செயற்திட்டத்தின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டது. | பணியிடத்திற்கு போதுமான தொழிலாளர்களினை ஈடுபடுத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டியதுடன் திருத்தப்பட்ட ஒப்பந்தக் காலத்தினுள் பணிகளினை நிறைவு செய்வதற்கு தொடர்ச்சியாக உன்னிப்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். |

## 3.3 விதிவிலக்கான நடவடிக்கைகள் / செயற்திட்ட நோக்கங்களில் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளருடைய சிபார்சுகள்--** |
|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், மேல், மத்திய மாகாணத்தின் பிராந்திய ஆதார சேவைகள் நிலையத்தின் வருமானமற்ற தண்ணீர் குறைப்பு குழுவிற்காக நிகழ்ச்சித்திட்டம்- செயற்திட்டம் 01 இன் கீழ் ரூபா 62.90 மில்லியன் கிரயத்தில் 07 கிறீவ் கப் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 17.97 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 கிறீவ் வாகனங்கள் செயற்திட்ட பகுதியின் கீழ் வந்திருக்காத சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண பிராந்திய ஆதார நிலையங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது | கிறீவ் கப் வாகனங்கள் வருமானமற்ற தண்ணீர் குழுவிற்கு கைளயிக்கப்படவில்லை என்றாலும், வருமானமற்ற தண்ணீர் வேலைகளுடன் தொடர்புடைய வேலைகளுக்காக கப் வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தன. | செயற்திட்ட நோக்கத்தினை அடைந்துக் கொள்வதற்காக சொத்துக்களின் பயன்பாட்டினை கண்காணிக்க ஒரு பொறிமுறையை நிறுவல் வேண்டும். |

### 3.4 சுற்றாடல் ரீதியான விடயங்கள்

| இல<br>----- | கணக்காய்வு அவதானிப்புகள்<br>--------------------------------------------------- | முகாமைத்துவத்தின் பதில்<br>----------------- | கணக்காய்வாளருடைய சிபார்சுகள்--<br>-------------------- |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கை ஒப்பந்தத்தின் 14.9 பிரிவின் பிரகாரம், ஓரளவாக நிறைவு செய்யப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட ஒப்பந்த வேலைக்காக சமரச வீதப்படி நிறுத்தி வைக்கப்பட்ட பணம் விடுவிக்கப்பட முடியும். ஐசீபீ -01 ஒப்பந்தத்தின் டீளம்ஏ 16 இல் 06 மாவட்ட அளவீட்டு பகுதிகள் (டீளம்ஏ) நிறைவு செய்யப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், ஒப்பந்தத்திற்கு முரணாக நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து பணமும் விடுவிக்கப்பட்டிருந்தது. | நிறுத்தி வைத்தல் உத்தரவாத்தின் அடிப்படையில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் கொடுப்பனவு செய்யப்பட்டது. இதனூடாக ஒப்பந்தக்காரரின் காசுப் பாய்ச்சல் மேம்படுத்தப்படுவதற்கு முடிகின்றது. | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை பின்பற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 வரையிலான கடன் வருமானத்தின் ஊடாக ரூபா 75.28 மில்லியன் திருப்பி செலுத்தக்கூடிய வைப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 544,275 ஆன தொகை அறவிடப்பட்டு திறைச்சேரிக்கு மீண்டும் செலுத்தப்படுவதற்கு பதிலாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனவே, செயற்திட்டத்தின் இறுதியில் மீண்டும் செலுத்தப்படக் கூடிய வைப்பு பெறுமானம் திறைச்சேரிக்கு மீண்டும் செலுத்தப்படுவதற்கு பதிலாக கடன் பண தொகைக்கு சமமான பெறுமானம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கடன் பணமாக கையளிக்கப்பட்டிருந்தது. | கடன் நிதி மற்றும் ஜீஓஎஸ்எல் வருமானம் தவிர பெறப்பட்ட எந்த நிதியையும் செயற்திட்டத்தினால் வைத்திருக்கவோ பயன்படுத்தவோ முடியாதென்பதனால், இந்த மீளப்பெறுவனவுகள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு அனுப்பப்படும். செயற்திட்டத்தினால் கணக்காய்வாளர்களின் பிரச்சனை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் முகாமைத்துவத்திற்கு தெரிவிப்பதுடன் அவர்கள் கணக்காய்வாளர்களை நாளதுவரையாக்குவர் | மீண்டும் செலுத்தப்படக் கூடிய வைப்பிற்காக கொடுப்பனவு செய்தல் பீஓகியூ (BOQ) உறுப்படியாக உள்ளடக்கப்படக் கூடாததுடன் கடன் பணம் அவ்வாறான கொடுப்பனவுகளுக்காக பயன்படுத்தப்படக் கூடாது. செயற்திட்ட கால இறுதியில் அவ்வாறான மீட்பு மீதிகள் காணப்படுமேயென்றால் அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத கடன் மீதியாக திறைச்சேரிக்கு மாற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் வருமானமற்ற கட்டிடத்திற்கு நுழையும் வழி சீஎம்சீ (CMC) இற்கு சொந்தமானதுடன் அது 2020 திசெம்பர் 31 வரையேயும் சீஎம்சீ (CMC) இடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, காணி கையகப்படுத்தும் வரையில் சீஎம்சீ இற்கு வாடகை கட்டணமாக மாதாந்தம் ரூபா 42,000 கொடுப்பனவு செய்வதற்கு செயற்திட்டம் உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 யூலை தொடக்கம் 2020 திசெம்பர் 31 வரை காலத்திற்கு மாதாந்த வாடகை கட்டணம் செலுத்தப்பட்டிராததுடன் 2020 திசெம்பர் 31 இற்கு நிதிக் கூற்றுக்களில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கையகப்படுத்தப்பட்ட செயற்பாடு செயற்படுத்தப்படுவதற்காக நிலுவை வாடகை கட்டணம் தீர்க்குமாறு சீஎம்சீ (CMC) கோரியிருந்தது. | மதிப்பிற்குரிய நகராதிபதியுடன் வழிகள், களஞ்சியசாலை மற்றும் எங்கள் கட்டிடங்கள் குறித்து பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. | செயற்திட்டத்தின் இறுதி கட்டத்தின் காரணத்தினால் கையகப்படுத்தல் செயற்பாடு நிறைவு செய்யப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சீஎம்சீ (CMC) தொடர்புடைய காணியை செயற்திட்ட நிர்மாணிப்பிற்காக பயன்படுத்தப்படுள்ளமையினால் சீஎம்சீ (CMC) பதவியணியின் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கு காணியொன்று வாடகைக்கு கொடுப்பதற்கு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் வாடகை ஒப்பந்தத்திற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 சனவரி தொடக்கம் செப்தெம்பர் வரையான காலத்திற்காக ரூபா 1.12 மில்லியன் ஆன வாடகை கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கோரப்பட்டுள்ளதுடன் அது மீளாய்வாண்டின் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்காக வாடகை கட்டணமாக ரூபா 4.52 மில்லியன் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தின் இறுதி கட்டத்தில் கூட இரு தரப்பினர்களும் இது தொடர்பாக தீர்விற்கு வந்திருக்கவில்லை. | மதிப்பிற்குரிய நகராதிபதியுடன் (சீஎம்சீ) காணி தொடர்பாக பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. | சீஎம்சீ பதவியணியருக்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு வாடகை நிலத்தினை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஐசீபீ – 01 மற்றும் ஐசீபீ – 02 ஒப்பந்தத்தின் உடன்படிக்கை நிபந்தனையின் 4.2 பிரிவின் பிரகாரம், ஒப்பந்தக்காரர் முறையான செயலாற்றலுக்காக செயலாற்றல் பாதுகாப்பு (தனது செலவில்) பெற்றுக் கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும், பொருண்மையான முறிகளில் 2.01 ஆம் எண் உருப்படியின் கீழ் அனைத்து முறிகள் மற்றும் உத்தரவாதங்கள் செலுத்துவதற்கு மேலதிகமான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் பீஓகியூ (BOQ) தயாரிப்பின் தெளிவின்மை காரணத்தினால், வங்கி கட்டணங்களாக ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 69.22 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. | காரணங்கள் மதிப்பாய்வு மற்றும் மீளாய்வு செய்ததன் பின்னர் பொது மேலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் பணம் செலுத்தப்படுவதற்கு இணக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. | தெளிவற்றதாக அல்லாமல் ஒப்பந்த ஆவணங்கள் தயரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | பீஓகியூ (BOQ) இன் பிரகாரம் விலை அதிகரிப்பிற்கான நிதியேற்பாடு ரூபா 600 மில்லியனாக காணப்பட்டதுடன் காலம் நீடிக்கப்பட்ட காரணத்தினால் ஐசீபீ (ICB) 01 மற்றும் ஐசீபீ (ICB) 02 ஒப்பநத்தங்களுக்காக ரூபா 1,060.75 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீடிக்கப்பட்ட ஒப்பந்தக் காலத்திற்கு பதிலாக தொடர்பு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அனைத்து இடைக்கால கொடுப்பனவுகளுக்காகவும் விலை அதிகரிப்புக்கள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதில் ரூபா 360.81 மில்லியன் ஆன தொகை 2021 மே 30 திகதி வரையிலும் கூட அங்கீகாரம் பெறப்படாது செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக காலம் நீடிக்கப்பட்டமையின் காரணத்தினால் செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகத்திற்கு மற்றும் அதன் பதவியணிக்கு பராமரிப்பு உள்ளடங்கலாக பொது செலவினத்தின் கீழ் செயற்திட்டத்தின் ஊடாக ரூபா 145.73 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | நியாயமான காரணங்கள் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர் ஈஓடீ (EOT) அளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் செலவினம் ஏற்கபடலாம். | ஒப்பந்த காலத்தினுள் நிறைவு செய்யப்படுவதற்கு பணிகளை தொடர்ந்து உண்ணிப்பாக மேற்பார்வை செய்தல் வேண்டும். |

## 3.5 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்/செயற்படுத்தல்/நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| இந்த செயற்திட்டத்தின் ஊடாக 2020 திசெம்பர் 31 இற்கு ரூபா 22,317 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், 2021 மார்ச் 31 இல் கொழும்பு நகரத்தின் வருமானமில்லாத தண்ணீர் 38.87 சதவீதமாக காணப்பட்டது. எனவே, செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 8 ஆண்டுகள் கடந்திருப்பினும் அது 10.13 சதவீதத்தினால் மட்டும் குறைத்திருந்தது. | நியமித்த நீளமானது அந்த நியமித்த பகுதிகளின் வருமானமற்ற தண்ணீர் சதவீதத்தினை குறைப்பதற்கு உதவுகின்றது. | எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 15 திகதிய 40 ஆம் இல ஐபீசீ ஊடாக ஐசீபீ -01 ஒப்பந்தத்தின் கீழ் மாற்றல் கட்டளை 27 ஊடாக ரூபா 226.26 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. அதில் ரூபா 23.45 மில்லியன் மாற்றல் குழு அங்கீகாரம் பெறப்படாது செலுத்தப்பட்டிருந்தது. | சில பொருட்களுக்கான விலைகள் ஒப்பந்த்காரருடன் கலந்தரையாடப்பட்டு வருகின்றது. எனவே, மாற்றல் உறுப்படி சான்றுறுதிப்படுத்தாமைக்கான தண்டனையை தவிர்ப்பதற்காகவே நாங்கள் ஐபீசீ ஊடாக மேற் கூறப்பட்ட பகுதிக்காக பரிந்துரை செய்தோம். | குறித்த அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் கொடுப்பனவிற்காக ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடும் செய்னமுறை விரைவுப்படுத்துவதற்காக வினைத்திறனான பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | குழாயிடும் நடவடிக்கைக்காக 2020 திசெம்பர் 31 வரை மீள செலுத்தப்படக் கூடிய வைப்பாக ரூபா 75.28 மில்லியன் ஆன தொகை கொழும்பு மாநகர சபைக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன் அமைத்தல் வேலைகளின் 90 சதவீதம் மற்றும் செயற்திட்டத்தின் நிலையான பாதை மீளமைப்பு நடவடிக்கைகளில் 75 சதவீதம் 2020 திசெம்பர் 31 இல் நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 வரை வைப்பிலிருந்து ரூபா 544,275 மட்டும் அறவிடப்பட்டிருந்தது. | கையளிக்கப்பட்ட பாதைகளுக்காக கொழும்பு மாநகர சபையிடமிருந்து பணம் மீளப் பெறுவதற்கு ஏற்கனவே கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினால் முன்வைக்கப்பட்ட சீஎம்சீ அறவிடல் செயற்பாட்டில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தாமதம் காணப்பட்டது. | பாதைகள் கையளிக்கப்படுவதற்கும், வைப்பு தாமதமின்றி மீண்டும் செலுத்தப்படுவதற்கும் இரு தரப்பினராலும் வினைத்திறனான பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2010 யூலை 26 திகதிய 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் நிகழ்ச்சித்திட்டம் செயற்திட்டம் - 01 இன் செயற்பாடுகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்படுவதற்கு செயற்திட்ட அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தயவுடன் இதற்காக இணைக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு பதிலினை பார்க்கவும். | நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டத்தின் 01 இன் கொடுக்கல் வாங்கல்களுக்காக உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |